மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்வியையும் எடுத்துக் கொள்ளலாம்.

* 38. *Q.*—THIRU GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether women promoters are to be appointed under I.U.C.D. schemes in hospitals; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்ட அல்லது கருத்தடை வளையங்களைப் பயன்படுத்தி வருகிற எழுதப் படிக்கத் தெரிந்த, நன்னடத்தையுள்ள மணமான மகளிர், கருத்தடை அறுவை சிகிச்சையை ஊக்கப்படுத்தும் பணியாளர்களாக நியமிக்கத் தகுதி பெறுவர்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: சபாநாயகர் அவர்களே, இப்படிப்பட்ட பெண் பிரசாரகர்களை நியமிப்பதன் மூலமாக குடும்பக் கட்டுப்பாட்டு வேலை நல்ல முறையில் வெற்றி பெற்றிருக்கிறதா? அது விஷயமாகப் புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதன் மூலமாக நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது. புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தற்சமயம் அந்தப் புள்ளி விவரங்கள் என் கையில் இருக்கவில்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, பிரதம சுகாதார நிலையங்களின் மூலமாக மிகவும் வெற்றிகரமான முறையில் குடும்ப நலத் திட்டம் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறதே, அப்படியானல் பிரதம சுகாதார நிலையங்கள் தொடங்கப்படாத மற்ற ஒன்றியங்களிலும் அவற்றைத் தொடங்க மத்திய அரசின் நிதி உதவியோடு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதற்கான செலவினங்களைப் பூராவும் மத்திய அரசாங்கம்தான் ஏற்றுக் கொள்ளுகிறது. மேலும் விரிவுப்படுத்த இந்த அரசாங்கம் முனைந்து கொண்டு வருகிறது.

THIRU K. VINAYAKAM: What is the remuneration paid to these women promotors under the scheme of Intra-Uterine Contraceptive Device?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அந்தப் பெண்களுக்கு, ஒரு தாய் கருத்தடை செய்துகொண்டால் ஒரு ரூபாய் வீதம் தரப்படுகிறது.

1969 பிப்ரவரி 24]

திரு. ஆர். நாகசுந்தரம்: ஐயா, குடும்பக் கட்டுப்பாட்டைப் பல வகைகளிலும் நமது அரசு மட்டும் அதிதீவிரமாகச் செயல்படுத்தி அதற்காக மத்திய அரசால் பாராட்டப்படுகிறது. அதனால் வரவர மக்கள் தொகை குறைந்து பாராளுமன்றத்தில் நமக்குள்ள இடமும் குறைகிறது. மேலும் மத்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டங்களில் மக்கள் தொகையைப் பொறுத்து பங்கீடு செய்யப் படுவதால் இழப்பு அதிகமாக ஏற்படுகிறது. இதற்கு நமது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்த வகையில் நமது அரசாங்கத்திற்கு எந்தவித கெடுதலும் இல்லை என்ற காரணத்தால் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை முழு முயற்சியோடு வெற்றிகரமாக இருக்கும்படி செய்து வருகிறது.

திரு. கே. எஸ். குமாரசாமி: தலைவரவர்களே, ஒரு சில வாலிபர்கள் பணத்திற்காக ஆசைப்பட்டு வயது ஆகாமலேயே அறுவை சிகிச்சை செய்து கொள்கிறார்கள். இதை அரசாங்கம் தடுக்கவில்லையா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படி யேதும் இதுவரை நடந்ததாகத் தெரியவில்லை. அப்படி ஏதேனும் நடைபெற்றால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. க. இராமமூர்த்தி: இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு முறை, அறுவை சிகிச்சை முறை நல்ல முறையில் நடைபெற்று அதற்கான பலனும் கிடைத்திருக்கும் இந்த நேரத்தில், அதுபற்றிய பிரச்சாரங்கள் பல நேரங்களிலே மிகவும் வருந்தத்தக்க வகையில், அருவருக்கத்தக்க முறையில் இருக்கிறது. அதைத்தடுக்க அரசு முயற்சி எடுக்குமா? உதாரணமாக, நம்முடைய தலைநகரில் நடைபெற்ற குடியரசு தின விழாவிலே குடும்பக்கட்டுப்பாட்டை விளக்கும் ஒரு வண்டி மிகவும் அருவருக்கத்தக்க முறையில் அமைந்திருந்தது. இதுபோன்றவற்றைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அந்த ஊர்வலத்திலே குடும்பக்கட்டுப்பாட்டை விளக்கும் அந்த வண்டி எல்லோருடைய பாராட்டையும் தனியாகப் பெற்றது. காங்கிரஸ் தலைவர்கள்கூட கைதட்டி ஆரவாரத்தோடு அதைப் பாராட்டினார்கள்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, தமிழகத்திலே ஆசிரியர்களுக்குத்தான் அதிகமாகக் குழந்தைகள் பிறக்கின்றன என்ற கருத்து இருக்கிறது. எனவே, ஆசிரியர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் சட்டபூர்வமாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: எல்லோரையும்விட ஆசிரியர்கள் இதை நன்கு உணர்ந்திருப்பார்கள். அவர்கள் படித்தவர்கள். எனவே, இதற்கென தனியாக எந்தவிதப் பிரசாரத்தையும் செய்ய வேண்டியிராது என்று கருதுகிறேன்.

[1969 பிப்ரவரி 24

திரு. எம். சுரேந்திரன் : சார், குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலமாக ஆட்களைக் குறைக்கும் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் 5 வருஷத் திட்டத்தில் ஆட்களின் எண்ணிக்கையைக் கொண்டு பணம் கொடுக்கப் படுவதால் இந்தக்கொள்கையை மறுபரிசீலனை செய்ய முயற்சி எடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியை ஏற்கனவே போட்டுவிட்டார்கள்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : தலைவரவர்களே, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதற்கு அநேகர் முன்வந்திருக்கிறார்கள். சர்க்கார் மருத்துவமனைகளில் செய்து கொள்கிறார்கள். அது மட்டுமல்லாமல், தனிப்பட்ட மருத்துவர்களிடமும் நிறையப்பேர் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்கிறார்கள். அந்தக் கணக்குகளும் அரசாங்கத்திற்குக் கிடைக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தனிக் கேள்வி போட்டால் தகவல் தரப்படும்.

வனஸ்பதி தொழிற்சாலை, விழுப்புரம்

*39 வினா—**திரு. சி. கோவிந்தராசன்**: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்திலுள்ள மதராஸ் வனஸ்பதி தொழிற் சாலைக்கு அரசாங்க உதவித் தொகை எவ்வளவு கொடுக்கப் பட்டுள்ளது ?

(இ) அதில் உற்பத்தியாகும் பொருள் என்ன ?

(உ) அந்தத் தொழிற்சாலை சில மாதங்களாக எந்த உற்பத்தியும் செய்யாமலிருப்பதற்குக் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இந்தத் தொழிற் சாலைக்கு ரூ. 10 லட்சம் கடன் வழங்கப்பட்டது.

(இ) இந்தத் தொழிற்சாலை இருமுறை தூய்மைப்படுத்தப் பட்ட 'மாவன்' என்னும் உணவு எண்ணெயை 1—12—1967 தேதியிலிருந்தும் வனஸ்பதியை 1968 ஏப்ரலிலிருந்தும் தயாரித்து வருகிறது.

(உ) பணமுடை ஏற்பட்டதால் இத் தொழிற்சாலை சிறிது காலத்திற்குச் செயல்படாமலிருந்தது. மேலும் அப்போதிருந்த தலைவராகிய திரு. C.P. சின்ஹா அவர்கள் 22—6—1966 நாளன்று திடீரென்று இறந்து விட்டார். எனவே, திரு. C.P. சின்ஹா அவர்களின் உறுதிமொழி மீது வங்கி வணிகர்கள் கொடுத்து வந்த கடன் உதவியைத் தொடர்ந்து பெற முடியாமல் போய்விட்டது.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுவது புகையிலையிலிருந்து எடுக்கப்படக்கூடிய ஒருவிதமான எண்ணெய். அந்த